ආයතනයේ නම : ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය

ප්‍රකාශන මාලා අංකය : 182/183

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர் : போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல்.**

Name of the Institution: **Ministry of Transport and Highways**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)**

**பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம்- 182**

**நிறுவனம் - புகையிரத திணைக்களம்**

| **கலந்துரையாடிய விடயங்கள்** | **நிறுவனத்தால் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்** |
|---|---|
| 01. பிரதான தொழில்பாட்டு திட்டம் தயாரிப்பதற்கு விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | இலங்கை புகையிரத திணைக்களத்திற்கான பிரதான திட்டம் தயாரிக்கும் பொருட்டு 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் ஐக்கிய அமெரிக்க டொலர் 1.5 ஆன அளிப்பு தொகை அங்கீகரிக்கப்பட்டது. (TA No 9382 SRI)<br><br>இந்த பிரதான திட்டம் தயாரிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் ஜப்பான் நாட்டு ஆலோசனை கம்பெனியான PADECO Co. LTD இடம் ஆலோசனைக்கான ஒப்பந்தம் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. புகையிரத திணைக்களத்தின் ஒப்புதலுடன் 2020 – 2030 காலப்பகுதிக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது.<br><br>இலங்கை புகையிரத திணைக்களத்தின் அலுவல்களை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்காக மூலோபாய செல்நெறிகளை இந்த திட்டம் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இடைக்கால மற்றும் நீண்டகால முதலீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| | தற்போது நாட்டில் காணப்படும் நிலைமையின் கீழ் இத்தகைய பாரிய முதலீடுகளை நடைமுறைப்படுத்து -வதில் மட்டுப்படுத்தல்கள் காணப்படுவதுடன், முதன்மை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களைத் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தல் காலோசிதமான விடயமாகும்.<br><br>இந்த விடயங்களையும் கவனத்தில் கொண்டு தற்போது தயாரிக்கப்பட்டுள்ள பிரதான திட்டம் பொருட்டு திருத்தங்களை உள்ளடக்கி இறுதி புகையிரத பிரதான திட்டம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. |
| களனிவெளிபுகையிரத வீதி திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் கொழும்பு புறநகர் புகையிரத திட்டத்தினால், களனிவெளி புகையிரத பாதையின் சாத்தியக்கூறு ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனுதவி எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உரிய கடன் தொகை இதுவரை கிடைக்கப்பெறாத காரணத்தினால் அத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. |
| 03.வெளிநாட்டு உதவி-களின் மீது நடைமுறை-ப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தை கண்கா-ணிக்கும் செயல்முறை | வெளிநாட்டு உதவித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த கலந்துரையாடல்கள், சம்பந்தப்பட்ட திட்டப் பணிப்பாளர் மற்றும் அமைச்சின் பங்கேற்புடன் மாதாந்தம் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படுவதாகவும், அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொருமுறை அமைச்சின் செயலாளர் |

| | |
|---|---|
| | தலைமையில் தொழில்பாட்டுக் குழுக்கள்(steering Committee) நடைபெறுவதாகவும். |
| 04.இந்திய கடன் உதவியின் கீழ் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்த160 ரயில் பெட்டிகளில் 103 பெட்டிகள்இன்னும் பயன்படுத்தப்படாமை. | புகையிரத திணைக்களத்திற்குரியவெகியும் ப்ரேக் சகிதமான(Vacuum Brake) ரயில் பெட்டிகளை பயன்படுத்தினாலும், புதிய தொழில்நுட்பத்துடனான எயார் ப்ரேக் சகிதமான (Air Brake)ரயில் பொட்டிகள்இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.<br><br>இந்த இந்திய கடன் உதவியின் கீழ், 160 ரயில் பெட்டிகளுடன், ரயில் என்ஜின்கள் சகிதம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன், குறித்த ரயில் என்ஜின்கள் எயார் ப்ரேக் சகிதம் (Air Brake) காணப்பட்டமையால் இந்த ரயில் பெட்டிகள் அதற்கேற்ப எயார் ப்ரேக்குகளுடன் (Air Brake)பொருத்தப்பட்டுள்ளன.<br><br>இந்த ரயில் பெட்டிகள் இந்நாட்டில் பயன்படுத்துவதற்கு தகுதியானவை என்பதுடன், முதலாவதாக10 பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு அவற்றை இயக்கி பரிசோதனை செய்த பின்னர், மேற்கொள்ள வேண்டிய குறைபாடுகளைச் சரிசெய்து எஞ்சிய பெட்டிகள் கொண்டுவரப்பட்டன. |

| | |
|---|---|
| | அவ்வாறு கொண்டு வரப்பட்ட பெட்டிகள் தற்போது ரயில்ஓட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. ஓட்டத்தின்போது ஏற்படும் தொழில்நுட்ப கோளாறுகள் தொடர்பில் உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| 05.முறையான போக்குவரத்து கொள்கை நடைமுறைப்படுத்தாமை | விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய தேவையான உட்கட்டமைப்புவசதிகளை விரைவாகவும், நவீன தேவைகளுக்கமைவாகவும் பொருத்தமான வகையில் அபிவிருத்தி செய்தல் அரசாங்கத்தின் கொள்கை சட்டகத்தில் அடிப்படை இணக்கப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. போக்குவரத்து துறை மூலம் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கின்ற வளர்ச்சிக்கான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படுகின்ற அடிப்படை கொள்கை முறையிலான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காக, தற்போது நடைமுறைப்படுகின்ற "தேசிய போக்குவரத்து கொள்கை - 2009" இற்றைப்படுத்தும் தேவைப்பாடு உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>தற்போதுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் போக்குவரத்து உள்கட்டமைப்புகளை சிறப்பான வகையில் பயன்படுத்துவதற்கு தேவையான தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, போக்குவரத்து தேவை முகாமைத்துவம் (TransportDemand Management)மற்றும் அதனுடன் தொடர்புடைய தரவு அமைப்புகளைத் தயாரித்தல் போன்றே சரக்குகள் மற்றும் |

| | |
|---|---|
| | கொள்கலன்களின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற துறைகளில் காணப்படுகினறெ இடைவெளிகளை குறைப்பதற்கான முறைமை தயாரித்தல் என்பன இத்தகைய இற்றைப்படுத்தலுக்கு ஏதுவாக அமைந்த குறிப்பிடத்தக்க காரணமாகும்.<br><br>அதன்படி, தற்போது நடைமுறையில் உள்ள "தேசிய போக்குவரத்துக் கொள்கை –2009" ஐ இற்றைப்படுத்திய பின்னர் தயாரிக்கப்பட்ட "தேசிய போக்குவரத்துக் கொள்கை –2019" வரைவு 26.12.2019 அன்று அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>குறித்த வரையுள் அப்போதைய அரசாங்கத்தின் தேசியக் கொள்கைச் சட்டகமான "சுபீட்சத்தின் நோக்கு" உடனான இசைவினை பரிசோதனை செய்வதற்காக போக்குவரத்து துறையின் நிபுணத்துவர்களைக் கொண்டமைந்த குழுவை நியமனம் செய்து பொருத்தமான திருத்தங்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்குமாறும், குறித்த திருத்தங்களை அடிப்படையாகக்கொண்டு மீண்டும் தயாரிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து கொள்கை வரையுளை அமைச்சரவையின் அனுமதிக்கு முன்வைக்குமாறும் அமைச்சரவை பத்திர இலக்கம் 19/3507/225/008 மற்றும் 2020.01.14 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

மேற்படி தீர்மானத்தின் பிரகாரம், பேராசிரியர் திரு. லலிதசிறி குணருவன் தலைமையில் 09 உறுப்பினர்களைக் கொண்டமைந்த நிபுணத்துவக் குழு போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் 2020.03.02 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டது. அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட குழு பின்வரும் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

01.போக்குவரத்து அமைச்சு
02. நிதி அமைச்சு
03.தேசிய திட்டமிடல் திணைக்களம்
04. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
05. மொறட்டுவ பல்கலைக்கழகம்
06. கொழும்பு பல்கலைக்கழகம்
07.கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

தேசிய போக்குவரத்துக் கொள்கை - 2019 வரைவு, மேற்கூறிய நிபுணர் குழுவின் விரிவான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டும், "சுபீட்சத்தின் நோக்கு" எனப்படும் அப்போதைய அரசாங்கத்தின் தேசியக் கொள்கைச் சட்டகத்துடனான இசைவிணக்கத்தையும் கண்டறிந்து பரிந்துரைகளுடன் சமர்ப்பித்த குழு அறிக்கை 2020.08.23 ஆம் திகதி தயாரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| | அதன் பின்னர் நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்படி வரைவில் தேவையான திருத்தங்களைச் செய்து, "இலங்கையின் தேசிய தரைவழிப் போக்குவரத்துக் கொள்கை" தயாரிக்கப்பட்டது.எனினும் குறித்த வரைவு அங்கீகரிக்கப்படவில்லை.<br><br>அதன் பின்னர், போக்குவரத்து அமைச்சின் திட்டமிடல் பிரிவால், இந்தப் போக்குவரத்துக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, அதில் உள்ளடங்கிய கொள்கைக் கோட்பாடுகளைத் (Policy Principles)தர்க்க ரீதியான அணுகுமுறைக்கு அமைவாக திருத்தம் செய்யப்பட்டதுடன், குறித்த வரையுளில் சேர்க்கப்படாத ஏதேனும் குறைபாடுகள் இருப்பின்அவற்றின் மறுபரிசீலனைக்குஉரிய பங்குதாரர்கள் அடையாளம் காணப்பட்டனர்.<br><br>இந்த வரைவு 13.01.2023 அன்று பங்குதாரர்களுடன் மறுபரிசீலனை செய்யப்பட்டு, 2023 முதல் காலாண்டில் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் செயற்படுத்தப்படும். |
| 06.புகையிரத போக்கு- | • அலுவலக ரயில்களில் ஏற்படும் தாமதத்தைக் |

| | |
| --- | --- |
| வரத்து சேவையினை திறம்பட செயற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் | குறைக்கும் வகையில், புதிதாக கரையோரப் பாதைகளில் காலை வேளையிலும், களனிவெளிப் பாதையிலும் புகையிரத நேர அட்டவணைகள் திருத்தப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்-தப்பட்டுவருகின்றன.<br>• அளுத்கம - காலி மற்றும் பெலியத்த - காலி இடையே ஓடும் ரயில்கள் ஒவ்வொன்றுக்கும் கூடுதல் பெட்டிகளுடன் இயக்குதல்.<br>• களனிவெளி பாதையில் வக புகையிரத நிலையம் வரை,புதிய அலுவலக ரயிலை இயக்குதல் மற்றும் அந்த ரயில் தற்போது கொஸ்கம புகையிரத நிலையம் வரை இயங்குதல்.<br>• அலுவலக நேரத்தில் கொழும்பு கோட்டைக்கும் நீர்கொழும்புக்கும் இடையில் புதிய ரயில் சேவை சேர்க்கப்பட்டுள்ளது.<br>• அனைத்து பணிகள் தொடர்பான பணி ஆய்வை மேற்கொண்டு (work study) அனைத்து துறைகளையும் மறுசீரமைத்து SOPஅனைவருக்கும் வழங்குதல்.<br>• ரயில் தாமதங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களே தாமத அறிக்கைகள் வழங்குவதனால், சில தாமதங்கள் தொடர்பான இயல்பு நிலை தெரிவிக்கப்படுவதில்லை. ஆயினும், இதனால் பயணிகள் சிரமப்படுகின்றனர். எனவே, தாமதங்கள் |

| | |
|---|---|
| | தொடர்பாக ஒரு சுயாதீன குழு அல்லது நிறுவனங்கள் மூலம் கண்டறிதல்.<br>• ஓடும் ரயில்களின் தூய்மையைப் பேணுதல் மற்றும் முறையான பராமரிப்புக்குத் தேவையான பணியாளர்களை வழங்குதல்.<br>• ரயில்களை நிறுத்தப்படுகின்ற யார்டுகளில் வசதிகளை மேம்படுத்துதல்.<br>• தொழில்நுட்ப வல்லுநர்கள், ரயில் ஓட்டுநர்கள், ஓட்டுநர் உதவியாளர்கள், ஷன்டின் ஓட்டுநர்கள் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்றுவிப்பு<br>• பெட்டிகள் மற்றும் என்ஜின்கள் என்பவற்றைப் பழுதுபார்ப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்குதல்.<br>• ரயில் நேர அட்டவணை மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களைக்கொண்டு ரயில்களை இயக்குதல் மற்றும் தேவையற்ற பயணிகள் இல்லாத ரயில்களை நிறுத்துதல்.<br>• குறைந்த வருவாய் உள்ள ரயில் நிலையங்களை மூடுதல் (குறைந்தபட்ச தண்ணீர் கட்டணம் மற்றும் மின் கட்டணத்தை ஈடுகட்ட முடியாத)<br>• அனுமதிச் சீட்டுகள் முற்றிலும் இயங்கலை ஊடாக வழங்குதல். (QR குறியீடு போன்றவை). Onlineமுறையில் வழங்குதல், திடீர் |

| | |
|---|---|
| | சோதனைகளை அதிகரிப்பதன் மூலம் அனுமதிச்சீட்டுகள் இல்லாத பயணிகளை அடையாளம் காணுதல்.<br>• Prepaid முறையில் அனுமதிச்சீட்டு வழங்குதல் மற்றும் அவற்றை சரிபார்க்க எளிய உபகரணங்களை வழங்குதல்.<br>• தேவையற்ற செலவுகளை நிறுத்துதல்.<br>• வருவாய் அதிகரிக்க அதிகாரிகளை ஊக்குவித்தல்.<br>• பணிச்சூழலை செயல்படுத்துதல்.<br>• பணியாளர் ஓய்வறை வசதிகளை மேம்படுத்துதல்.<br>• PPP முறையின் கருத்திட்டங்கள் மூலம் வருவாய் அதிகரித்துக்கொள்ளுதல்<br>• டீசல் நுகர்வு செலவு மிக அதிகமாக இருப்பதால் அதற்கு முறையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தல்.<br>• பராமரிப்பு முகாமை பொருட்டு மென்பொருள் அறிமுகம்.<br>• பாதைகள் மற்றும் யார்டுகளை பராமரிப்பதன் மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் |

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 182

நிறுவனம் - இலங்கை போக்குவரத்துச் சபை

| பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் - 182 | நிறுவனத்தால் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் |
|---|---|
| 07.தற்போது காணப்ப-டுகின்ற நெருக்கடியான நிலைமையில் இயக்கத்தில் காணப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை | பேருந்து இயக்கத்தின் போது பேருந்துகளில் பயணிக்கின்ற பிரயாணிகளுக்கு விபத்துகளின்றி பயணிப்பதற்கு ஆற்றல் உள்ளதா என்பதை பரீட்சித்தலும் சரிபார்த்தலும் மேற்கொள்ளப்படும். |
| 08.நாட்டில் காணப்படும் எரிபொருள் பற்றாக்குறை பேருந்து சேவை மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? | QR குறியீடுகள் மூலம் தனியார்பேருந்துகளுக்கும், ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களால் எரிபொருள் விநியோகிக்கப்படுவதால், இ.போ.ச டிப்போக்கள் ஊடாக தனியார் பேருந்துகளுக்கான எரிபொருள் தேவை தற்போது குறைந்த மட்டத்தில் உள்ளது.<br>(இலங்கை போக்குவரத்துச் சபை)<br><br>மாகாண போக்குவரத்து அதிகாரசபை பேருந்துகளின் பொருட்டு வாரமொன்றுக்கான எரிபொருள் தேவையில் 60% ம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பேருந்துகளின் வாரமொன்றுக்கான எரிபொருள் தேவையில் 75% ம், வழங்குவதற்கு வலுசக்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அதனை தொடர்ச்சியாக |

| | |
|---|---|
| | நடைமுறைப்படுத்தப்படுகின்றது.<br><br>(தேசிய போக்குவரத்து ஆணைக்குழு) |
| 09.இலங்கை போக்கு-வரத்து சபை டிபோ ஊடாக தனியார் பேருந்துகளுக்கு வழங்குகின்ற எரிபொருளை, அவ்வாறே பெருந்துகளின் ஓட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறதா என்பது தொடர்பாக கண்டறியும் வகையில், ஒரு முறைமை தயாரிக்க வேண்டுமென செயற்குழுவலியுறுத்தல் | பொதுக் கணக்குக் குழுவால் பாராளுமனற்த்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகளின் கீழ், எதிர்வரும் காலப்பகுதியில் பொது போக்குவரத்தினை மிக திறம்பட பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்ற குறுகியகால மற்றும் இடைக்கால நிகழ்ச்த்திட்டங்களை உள்ளடக்கி செயற்றிட்டம் தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது, “இலங்கையின் தேசிய தரைவழிப் போக்குவரத்துக் கொள்கை” பங்குதார நிறுவனங்கள், கல்வியாளர்கள், அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட அந்தக் கொள்கை மற்றும் அமைச்சரவைப் பத்திரம் 21.03.2023ஆம் திகதி கௌரவ போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அந்தக் கொள்கை மற்றும் அமைச்சரவைப் பத்திரம் என்பவற்றுக்குஅமைச்சரவை அனுமதி |

| | |
|---|---|
| | கிடைக்கப்பெற்றதன் பின்னர், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். அடையாளம் காணப்பட்ட கொள்கைக் கட்டமைப்பின் (policy framework ) கீழ் தேசிய தரைவழிப் போக்குவரத்துக் கொள்கையின் ஒட்டுமொத்த நோக்கத்தை அடைவதற்காக, எய்துக்கொள்ள வேண்டிய கூறுகளான துறைசார் நோக்கங்களும் இந்தக் கொள்கை கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளன.<br><br>பின்னர் துறைசார் நோக்கங்களை அடைவதற்கான மூலோபாயங்களை (statergies) தற்போதும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதற்கான செயல்பாடுகள் மற்றும் காலச் சட்டகம் (time frame) உள்ளடக்கப்பட்ட குறுகிய மற்றும் இடைக்கால செயற்றிட்டங்கள், இணைந்த நிறுவனங்களின் பங்கேற்புடன் அவர்களின் இணக்கப்பாட்டுடன் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 182

நிறுவனம் - இலங்கை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

| கலந்துரையாடிய விடயங்கள் | நிறுவனத்தால் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் |
|---|---|
| 20.ஈ – மோடரின் கருத்திட்டம் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் ஈ – மோட்டரிங் கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக தற்போது ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளது.<br><br>அதன்படி, அரச மதிப்பீட்டாளர் கடித இலக்கம்CM 1 /CMC /RP /1179 மற்றும் 16.01.2023 ஆம் திகதிய மேற்படி கட்டிதம் மூலம் கட்டிடத்தின் முதலாவது,இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது மாடிகளுக்கான மாதாந்திர சந்தை வாடகை ரூபா.3,400,000.00 என மதிப்பிடப்பட்டுள்ளது.<br><br>மேலும், 2022.01.02 ஆம் திகதியில் ஸ்ரீ ஜீனரத்னா கல்வி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் சமர்ப்பித்த கடிதத்திலும், கடிதத்துடன் இணைக்கப்ப-ட்டுள்ள இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கட்டிடத்தின் மறுசீரமைப்பு பணிகளுக்கு |

| | |
|---|---|
| | உட்பட்டு மேற்படிமாதாந்திர வாடகை பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மாதாந்திர வாடகை பெறுமதி எதிர்வரும் 02 ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதிக்கு வலுவிலிருக்கும் வகையில் குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்குமாறும், கட்டிடத்தின் உரிமையாளரால் அனைத்து பழுதுபார்ப்பு மற்றும் மதிப்பீட்டு வரிகளை செலுத்தும் அடிப்படையில், மேற்படி வாடகை பெறுமதி பதிவு செய்துள்ளதாகவும் ஏற்புடைய கடிதத்தில் மெலும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>கௌரவ போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் MT /05/2023 ஆம் இலக்க மற்றும் 2023.01.23 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு வழங்கியுள்ள அபஇ 22/1091/608/009 மற்றும் 2022/08/22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம், 2023.02.13 ஆம் திகதி அமைச்சரவை துணைச்செயற்குழு கூட்டம்நடாத்தப்பட்டுள்ளதுடன், குறித்த கூட்ட அறிக்கையின்படி, நிதி, பொருளாதார உறுதிப்பாடுமற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மீது உரிய கவனம் செலுத்தியும், பொது திறைசேரிக்கு செலவின சுமை ஏற்படாத வகையிலும் நிலைபேண்தகு வகையிலும் ஈ-மோட்டரின் கருத்திட்டம் |

| | |
|---|---|
| | நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்பிப்பதற்காக பின்வரும் கட்டமைவுடனான குழுவொன்றை நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>• பிரதமஅமைச்சரின் செயலாளர் - பிரதமர் அமைச்சர் செயலகம் – தலைவர்<br>•தொழில்நுட்பஅமைச்சின்செயலாளர் - தொழில்நுட்பஅமைச்சு - உறுப்பினர்<br>•போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு<br>• திறைசேரியின் செயலாளரால் பெயரிடப்படும் திறைசேரியின் பிரதிச் செயலாளர்– நிதி அமைச்சு<br>• தலைவர் - இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம்<br><br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்- செயலாளர் / அழைப்பாளர்<br><br>மேற்படி குழு 21.02.2023 ஆம் திகதியன்று கூடியதுடன், அதன்போது குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை எதிர்வரும் 02 வாரங்களுக்குள் கௌரவ அமைச்சர் அவர்களால் மீண்டும் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.<br>(போக்குவரத்து அமைச்சு) |

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 183

நிறுவனம் - போக்குவரத்து அமைச்சு

| கலந்துரையாடிய விடயங்கள் | நிறுவனத்தால் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் |
|---|---|
| முதலாவது பகுதி : 90.00 | **01. ஒதுக்கத்தின் வாகனங்களுக்கு நாளாந்த ஓட்ட குறிப்புகள் மற்றும் மாதாந்த அறிக்கை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படாமை.**<br><br>2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் முற்றுமுழுதாக கணக்காய்வாளர் அதிபதியிடம் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான மாதாந்த சாராம்ச அறிக்கைகள் தற்போது கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**02. வாகனமொன்று பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் உள்ளவிடத்து, 06 மாதங்களுக்கு குறைந்த காலப்பகுதியில் அகற்றப்படாதிருத்தல்.**<br><br>KX-3743 BMW கார் வண்டியை பழுதுபார்ப்பதற்காக50இலட்சத்துக்கும் அதிகமான பணம் செலவிட நேரிடுவதால், மூவர்அடங்கிய குழுவின் அறிக்கை பிரகாரம்,இந்த கார் வண்டி பழுது பார்த்தல் பலனில்லை என்று குறிப்பிடப்பட்டு |

| | |
|---|---|
| | கார் வண்டி பழுது பார்த்தல் பலனில்லை என்று குறிப்பிடப்பட்டு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த வண்டிஅமைச்சின் கீழ் உள்ள புகையிரத திணைக்களத்திற்கு தேவையானதா? இல்லையா? என்று வினவி கடிதங்கள் அனுப்பி வைத்திருப்பினும், இதுவரை பதில் கிடைக்கப் பெறாமையால் இந்த வாகனம் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளவில்லை. எனினும்எதிர்வருங் காலங்களில் அகற்றல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புகையிரத திணைக்களத்திடம் நினைவூட்டல் கடிதம் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>03. வாகனங்களின் எரிபொருள்செலவழிப்பு சோதனையை மேற்கொள்ளாமை<br><br>2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில்,ஏறத்தாழ 03 வாகனங்களுக்கு மட்டும் எரிபொருள் செலவழிப்பு சோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (KD-4971 / KD-9204 / KI-1775 ) அதன் பின்னர்வாகனங்களின் எரிபொருள் செலவழிப்பு சோதனை செய்வதற்கு அறிவுறுத்தல்கள் மற்றும் அனுமதி வழங்கப்படாததால், எரிபொருள்செலவழிப்பு சோதனை மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்திலஅமைச்சின் ஒதுக்கத்தில் உள்ள வாகனங்களில் எரிபொருள் செலவழிப்பு பரிசோதனையை, அதாவது ஒரே முறையில்03 வாகனங்களுக்கு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏப்ரல் மாதம் தொடக்கம் எரிபொருள் |

செலவழிப்பு பரிசோதனை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

04. ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படும் நிலுவை கடன் மீதி

| **தொடர் இலக்கம்** | **பெயர்** | **விபரம்** |
|---|---|---|
| 01. | திரு.ஏ.டப்.ஏ.யு.ஜே. அலஹகோன் (ரூபா.198,138/=) | முறையான வகையில் லீவு அனுமதிக்காது சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக 2014.02.28 ஆம் திகதி சிவில் விமான சேவைகள் அமைச்சில் சேவையில் ஈடுபட்டிருக்கையில், சேவை வெறித்தாக்கும் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலரால் சேவை வெறித்தாக்கும் கட்டளைக்கு எதிராக அரச சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த மேன்முறையீட்டை அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | | குறித்த தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டாளரால்நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>குறித்த தீர்மானம் கிடைக்கும் வரை சுயவிபரக் கோவையும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் உள்ளது.<br><br>நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையால் இதுவரை தீர்மானம் வழ்கப்படவில்லை. அதுவரை கடன் மீதி அறவிடும் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| | 02. | திரு.கே.பீ.எம்.டீ. டயஸ்<br>(ரூபா.112,964/=) | 2023.03.20 ஆம் திகதி காணப்பட்ட நிலுவை கடன் மீதி<br>(ரூபா.112,964/=)முற்றுமுழுதாக செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. |
| | 03. | திரு.<br>எச்.எம்.பண்டார<br>ரூபா.87,600/=) | முன்னிருந்த சிவில் விமான சேவைகள் அமைச்சின் சேவையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஈடுபட்டிருக்கையில் 2015.12.01 ஆம் திகதி சேவை வெறித்தாக்கப்பட்டுள்ளது.<br><br>கடன் மீதியை செலுத்துமாறு பலமுறை கடிதம் அனுப்பியும் எந்தவொரு பதிலும் இல்லை.<br><br>குறித்த கடன் மீதியை மீளப்பெறுவது தொடர்பான சட்டப் பணிகளை மேற்கொள்ளுமாறு கௌரவ சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. இந்த வழக்கில் அழைப்பாணைதொடர்பிலான நடவடிக்கை 27.06.2023 ஆம் திகதி அன்று மேற்கொள்ளப்படவுள்ளது. |
| | | திருமதி. பீ.டப்.எம்.பீ. பொடிமெணிகே ரூபா. 121,945/=). | இத்தாலியில் வேலை வாங்கித் தருவதாகக் கூறிப் பணம் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட வெளிநாட்டு வேலை வழங்கவில்லை எனப் பலர் செய்த முறைப்பாட்டைக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கருத்தில் கொள்ளப்பட்டது. அதன்படி,08.03.2013 அன்று நீதிமன்றில் 'பி' அறிக்கை சமர்ப்பித்த பின்னர் குற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் பல வெளியாட்கள் தனித்தனியாக வெவ்வேறாக அளித்த முறைப்பாடுகளுக்குதனித்தனி வழக்கு எண்களின் கீழ் கோவையிடப்பட்ட ஒவ்வொரு வழக்குகளுக்கும் சமமான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வணைத்து விடயங்களையும் கவனத்தில்கொண்டு பார்த்து இந்த அலுவலரை பணித் தடை செய்த திகதி தொடக்கம் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.<br><br>சேவையிலிருந்து நீக்குதல் கட்டளைக்கு எதிராக திருமதி |

| | | | |
|---|---|---|---|
| | | | பீ.டப்.எம்.பீ.பொடிமெணிகே அவர்களால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த மேன்முறையீட்டை அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது பீ.டப்.எம்.பீ.பொடிமெணிகே அவர்களால் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன், அடுத்த அழைப்பு 2023 பெப்ருவரி மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையின் தீர்மானம் கிடைக்கும் வரை சுயவிபரக் கோவையும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் வைக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | 05. **அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மீறி பதவியணி ஆட்சேர்ப்பு செய்தல்.**<br>அரசாங்க கொள்கையின் அடிப்படையில் இவ்வமைச்சுக்கு 61 அபிவிருத்தி அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும், முன்னைய இராஜாங்க அமைச்சிடம் அமைச்சின் வீடியோ கெமரா வல்லுநர் ஒருவரையும் இணைக்கப்பட்டுள்ளதுடன், அவர் தற்போது அ.நி.சு.14/2022 படி உள்நாட்டு லீவில் உள்ளார். |
| பகுதி இரண்டு : 59.00 | சேவை பெறுநர் பட்டயம் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளது. மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, 2020 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த முடியவில்லை. தற்போது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பு நிலைக்கு மாறியுள்ளதால், பயிற்சித் திட்டம் தயாரித்து அதன் கீழ் அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது. அதன்படி, ஒரு ஊழியருக்கு ஆண்டுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்கள் பயிற்சி அளிக்க ஆகக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கவும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்தவும், நிறுவனத்தில் சிரேட்ட உதவிச் செயலர் (நிருவாகம்) நியமிக்கப்பட்டுள்ளார். ஒட்டுமொத்த பதவியணிக்கான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை இவ்வாண்டில் எடுக்கப்படும். |

எம். எம். பி. கே. மாயாதுன்னெ

செயலாளர்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு